# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,726 — 1966 දෙසැම්බර් 16 වැනි සිකුරාදා — 1966.12.16

14,726 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 365 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும .. | 367 | ஆதன விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. | 369 | விநிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | 370 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 370 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

*ச. வ.—பீ 89/52*

### *வவுனியா நகர சபை*

### *வாடி வீட்டுச் சட்டம்*

*(275 ஆம் அத்தியாயமான) வாடி வீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், அதற்குத் தகுந்த அதிகார சபையான வவுனியா நகரசபையால், ஆக்கப்பட்டு, அப்பிரிவின் கீழ்த் தமக்குரித் தாக்கப்பட்ட தத்துவங்களினால் உள்ளூராட்சி அமைச்சரால், அங்கீகரிக்கப்பட்ட வவுனியாவிலுள்ள வாடிவீட்டிற்குரிய விதிகள்.*

*டபிள்யூ. ஜே. பெர்னாண்டோ,*
*நிரந்தரச் செயலாளர்,*
*உள்ளூராட்சி அமைச்சு.*

*கொழும்பு,*
*நவெம்பர் 22, 1966*

*விதிகள்*

*1. (1) வாடி வீட்டை உபயோகிக்கும் அல்லது அதன் ஏதாவது ஒரு பாகத்தில் தங்கும் ஒவ்வொருவரும், இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதத்தின்படி, தங்கு கட்டணங்களையும் கூலிகளையும் செலுத்துதல் வேண்டும்.*

*(2) பின்வருவோர் தொடர்பாக, எவ்வகைக் கட்டணமும் வசூலிக்கப்படுதலாகாது :—*

*(அ) ஒரு கைப்பிள்ளை ;*

*(ஆ) வாடி வீட்டிற்கு வரும் ஒருவருக்குப் பணிவிடை செய்யும் (மோட்டார் வண்டிக்குள் அல்லது வண்டில் கொட்டிலுக்குள் நித்திரை செய்யும்) ஒரு வேலைக்காரன் ;*

*(இ) வாடி வீட்டின் வளவுகளினுள் விடப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு மோட்டார் வண்டியின் சாரதி—(இவர் மோட்டார் வண்டியினுள் அல்லது வண்டில் கொட்டிலுக்குள் நித்திரை செய்தல் வேண்டும்).*

*2. (1) வாடி வீட்டிற்கு வரும் ஒவ்வொருவரும் வாடி வீட்டினுள் நுழைந்தவுடன் வாடி வீட்டிற்கு வருவோர் புத்தகத்தில் தமது பெயரையும் முகவரியையும் தெளிவாகப் பதிதல் வேண்டும்.*

*(2) முந்திய பந்தியில் காட்டப்பட்ட நிபந்தனைக்கு இணங்கினாலொழிய, எவரும் வாடி வீட்டில் எப்பகுதியும் தங்குதலாகாது ; அத்துடன் அவர்கட்குச் சிற்றுண்டிகள் வழக்கப்படுதலுமாகாது.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ

**பேர்னாட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

3. (1) தலைவரிடம் எழுத்தில் பெற்ற அனுமதியின்றி, எவரும் வாடி வீட்டின் எப் பாகத்திலும் அடுத்து மூன்று நாட்களுக்குமேல் தங்குதலாகாது.

(2) மேற்கூறப்பட்ட அனுமதியின்றி, வாடி வீட்டில் தங்குமெவரும், மூன்று நாட்கள் முடிந்ததும், வாடி வீட்டினின்றும் வெளியேறுதல் வேண்டும்.

4. வாடி வீட்டில் தங்கும் ஒருவராற் செலுத்தப்படும் கட்டணங்கள் யாவும் இது தொடர்பாக வைத்திருக் கப்படும் இடாப்பில் வாடிவீட்டுப் பொறுப்பாளராற் பதியப்படல் வேண்டும்.

5. வாடிவீட்டில் தங்கும் ஒருவராற் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் யாவும், கோரப்பட்டவுடன் பணமாகக் கொடுக்கப்படல் வேண்டும்; அவ்விதம் செலுத்தத் தவறின், வாடிவீட்டுப் பொறுப் பாளர் அத்தகைய வருவோருக்கு மேலும் எதையும் வழங்குவதை மறுக்க உரித்துடையவராதல் வேண் டும்.

6. (1) ஒரு நாளிற்கு முன்பாக முன்னேற்பாடு செய்யப் பட்டாலொழிய எவருக்கும், வாடி வீட்டில் அவர் வருமுன், எவ்வறையும் ஒதுக்கி வைக்கப்படுத லாகாது.

(2) இவ்விதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக் கிணங்க, ஒரு அறை ஒதுக்கப்பட்டிருப்பின், முன்னேற்பாட்டுடன் ஒதுக்குபவர் அவ் அறையில் தங்காவிடினும் அதற்குரிய கட்டணத்தை செலுத்து தல் வேண்டும்.

(3) ஒரு அறையை முன்கூடியே, ஒருவர் அல்லது ஒரு குழு ஒதுக்கி வைத்திருந்தால், ஒதுக்கியவர் அல்லது ஒதுக்கிய குழு வரும்வரைக்கும், அது தேவைப்படும் இன்னொருவருக்கு விடப்படலாம்.

7. வாடி வீட்டுப் பொறுப்பாளருக்குக் கொடுக்கப்படுந் தந்தியில் தந்தி கொடுப்பவரின் பெயரும் முகவரி யும் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, வாடி வீட்டுப் பொறுப்பாளர், தந்தியில் காட்டப்பட்டபடி உணவு தயாரித்து வைக்கக் கட்டுப்பாடுடையவராதலாகார்.

8. படுக்கை விரிப்பு விரித்தாலொழிய, வாடிவீட்டிலுள்ள ஒரு கட்டில், சாய்மணைக்கதிரை, அல்லது மஞ்சம் ஆகியவை நித்திரை செய்வதற்காக உபயோகிக்கப் படுதலாகாது.

9. வாடி வீட்டிற்கு வரும் ஒருவர் தம்மால் சேதப்படுத்தப் பட்ட எல்லாப் பொருட்களினது பெறுமதியையும் வாடிவீட்டில் உள்ள அறிவிப்புப் பலகையில், விவரிக்கப்பட்ட விகிதத்திற்கிணங்கச் செலுத்துதல் வேண்டும்.

10. (1) வாடிவீட்டிற்கு வரும் ஒருவர், வாடி வீட்டைப் பற்றியோ, வாடி வீட்டு பொறுப்பாளரைப் பற்றியோ, ஏதாவது முறையீடு செய்ய இருப்பின், அதனை வாடி வீட்டில் வைத்திருக்கப்பட்டிருக்கும் முறைப்பாட்டுப் புத்தகத்தில் குறித்தல் வேண்டும்.

(2) வாடி வீட்டில் தங்கும் ஒருவர், கேட்ட வேளையில் அங்கு வைத்திருக்கப்பட்டிருக்கும் முறைப்பாட்டுப் புத்தகத்தை, அவருக்குக் கொடுக்க வாடி வீட்டுப் பொறுப்பாளர், கடமைப்பட்டவராவர்.

(3) வாடி வீட்டுக் கட்டணங்கள் பதியும் புத்தகத்தில், வாடி வீடுபற்றிய குறிப்புகளோ, முறைப்பாடுகளோ பதியப்படுதலாகாது.

11. (1) தலைவரிடமிருந்து எழுத்திலான அனுமதியின்றி வாடி வீட்டில், நடப்புகற் பொது விருந்தோ இராவிருந்தோ, தேனீர் விருந்தோ, அல்லது வரவேற்போ கொண்டாட்டமோ வைத்தலாகாது அத்தகைய மத்தியானப் பொதுவிருந்து, இரா விருந்து, தேனீர்விருந்து, அல்லது வரவேற்பு அல்லது கொண்டாட்டம் ஒவ்வொன்றும் வாடி வீட்டில் தங்கும் மற்றவர்கட்குத் தொல்லை விளைக் காத முறையில் நடாத்தப்படல் வேண்டும்.

(2) வாடி வீட்டின் முழு இடத்தையோ, அல்லது அதில் ஒரு பாகத்தையோ, (1) ஆம் பந்தியில் குறிக்கப் பட்ட அலுவல்கட்குத் தலைவர் அனுமதித்தால் சபைக்கு :—

(அ) சமூகமளித்த ஆட்களின் தொகை, 24 இற்கு மேற்படாவிடின் (இதனுடன் கொடுக்கப்பட்ட அட்டவணையில் விவரிக் கப்பட்ட தங்குங் கட்டணத்திற்குப் பதி லாக) முதல் 6 மணித்தியாலங்கட்கு 15 ரூபாவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதில் ஒரு பாகத்திற்கும் 2 ரூபாவும்;

(ஆ) சமூகமளித்த ஆட்களின் தொகை, 24 இற்கு மேற்படின் இதனுடன் கொடுக்கப் பட்ட அட்டவணையில், விவரிக்கப்பட்ட தங்குங் கட்டண விகிதப்படியான கட்ட ணமும்;

செலுத்தப்படல் வேண்டும்.

12. வாடி வீட்டில் தங்கும் ஒருவருக்கு, அங்குள்ள ஒரு வண்டில் கொட்டிலையோ, ஒரு லாயத்தையோ உப யோகிக்க, அங்கே தங்காத ஒருவரைக் காட்டிலும், கூடிய உரிமை இருத்தல் வேண்டும்.

13. வாடிவீட்டிலுள்ள வண்டில் கொட்டிலில் அல்லது அவ் விடத்திலுள்ள வளவில் நிறுத்தப்படும், ஒரு தனிப் பட்ட வாகனத்தின் சொந்தக்காரர் அல்லது அதனை வாடகைக் கமர்த்தியவர், வாடிவீட்டில் தான் தங்கா விட்டாலும், வாகனம் விடப்பட்ட காலத்திற்குரிய தங்கும் கட்டணத்துடன், வாகனம் நிறுத்தியதற் குரிய தங்கும் கட்டணத்தையும், அல்லது நிறுத் தியதற்குரிய கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும்.

14. இங்கே விவரிக்கப்பட்டுள்ள விதிகளுள் ஏதாவ தொன்றை மீறியதற்குக் குற்றவாளியான ஒரு ஆள் வாடிவீட்டில் தங்குவதைத் தடைசெய்தல் தலை வருக்குச் சட்டமுறையானதாயிருத்தல் வேண்டும்.

15. வாடிவீட்டில் எப்பாகத்தையாவது ஒருவர் அல்லது ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் ஒழுக்கக்கேடான செயல்களுக்கு உபயோகிப்பதை வாடிவீட்டுப் பொறுப்பாளர் அனுமதிக்கலாகாது.

16. வாடிவீட்டை உபயோகிக்கும் ஏனையவர்கட்குத் தொல்லை விளைவிக்கும் முறையில் எவ்வாளும் அல் லது அவருடைய சேவகரும் வாடிவீட்டில் நடந்து கொள்ளலாகாது.

17. வாடிவீட்டிற்கு வருபவர் எவராவது, வாடிவீட்டிற்கு நாய் கொண்டு செல்லலாகாது.

18. இரண்டு வருடங்கட்குக் குறையாத காலத்திற்குச் சபையில் பதவி வகிக்கும் அலுவலர்கள், வாடி வீட்டினை அல்லது அதன் ஒரு பாகத்தினை உபயோ கப்படுத்துவதற்கு, இங்குக் கொடுக்கப்பட்ட அட்ட வணையில் விவரிக்கப்பட்ட கட்டணங்களில் அரை வாசி மட்டுமே அவர்களிடமிருந்து அறவிடப்படு தல் வேண்டும். இச்சலுகை இத்தகைய அலுவலர் ஒவ்வொருவரினதும், குடும்பவுறுப்பினர்கட்கும் ஏற் புடையதாயிருத்தல் வேண்டும்.

19. சபை அலுவல் தொடர்பாகக் கடமையைச் செய்வதற்கு வாடிவீட்டில் தங்கும் ஓர் அரசாங்க அலுவலரிடமிருந்து, இங்குக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் அரைவாசி மாத்திரமே, அறிவிடப்படுதல் வேண்டும்.

20. இங்கே விவரிக்கப்பட்டுள்ள விதிகளுள் ஏதேனுமொன்றை மீறுவது ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்தினுல் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

21. இவ் விதிகளில்—" தலைவர் " என்பது சபைத் தலைவரைக் குறிக்கும்; " சபை " என்பது வவுனியா நகரசபையைக் குறிக்கும்; " வாடிவீடு " என்பது வவுனியா வாடிவீட்டைக் குறிக்கும்.

### அட்டவணை தங்கும் கட்டணங்கள்

ரூ. ச.

1. படுக்கையை உபயோகிக்காது வாடிவீட்டில் தங்கும் ஒவ்வோர் ஆளுக்கும்—
   - (அ) ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாத காலத்திற்கு
     - (i) பின்னேரத் தேனீர்மாத்திரம் அருந்துவதற்கு — 0. 10
     - (ii) சாயங்காலம் தேனீர்தவிர்ந்த ஒரு சாப்பாட்டை வளவிற்குள் சாப்பிடுவதற்கு — 0. 25
   - (ஆ) ஒரு மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் இரு மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்தில்—
     - (i) பின்னேரத் தேனீர் மாத்திரம் அருந்துவதற்கு — 0. 25
     - (ii) சாயங்காலம் தேனீர் தவிர்ந்த ஒரு சாப்பாட்டை வளவிற்குள் சாப்பிடுவதற்கு — 0. 50
   - (இ) இரு மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 12 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு — 1. 00
   - (ஈ) 12 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு — 2. 50

2. வாடிவீட்டில் நித்திரை செய்வதற்கு ஒரு படுக்கையை உபயோகித்து ஒரு வேளைச்சாப்பாடு உட்கொண்டு தங்கும் ஒவ்வோர் ஆளுக்கும்—
   - (அ) தங்கும் காலம் 4 மணித்தியாலங்கட்கு மேற்படாதிருப்பின், ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் — 0. 50
   - (ஆ) தங்கும் காலம் 4 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டும் இருப்பின் — 2. 50

3. சாப்பாடு உட்கொள்ளாது, ஒரு அறையில் ஒரு படுக்கையை நித்திரை செய்வதற்கு உபயோகித்து, 24 மணித்தியாலங்கட்குத் தங்கும் ஒவ்வொருவருக்கும் — 3. 00

4. தலைவரின் அனுமதியுடன் வாடிவீட்டில் ஏதாவதொரு பாகத்தில், ஒரு முழு மாதகாலத்திற்குத் தங்கும் ஒவ்வோர் ஆளுக்கும் — 50. 00

5. வண்டில் கொட்டிலினுள் விடப்படாது வளவில் நிறுத்தப்பட்ட மோட்டார் வண்டி அல்லது மோட்டார் ஈருருளிக்கு—
   - (அ) 6 மணித்தியாலங்கட்கு மேற்படாத காலத்திற்கு—கட்டணம் இல்லை.
   - (ஆ) 6 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டும் உள்ள காலத்திற்கு — 0. 25

6. வண்டில் கொட்டிலினுள் விடப்பட்ட மோட்டார் வண்டி அல்லது மோட்டார் ஈருருளிக்கு—
   - (ஆ) 6 மணித்தியாலங்கட்கு மேற்படாத காலத்திற்கு— கட்டணம் இல்லை.
   - (ஆ) 6 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்குட் பட்டுமுள்ள காலத்திற்கு — 0. 50
   - (இ) ஒவ்வொரு முழு மாத காலத்திற்கு — 10. 00

12-842—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### உள்ளூர் ஆட்சிச் சேவை

**உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4க்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—1967**

உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4க்கான ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையொன்று அண்மையில் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினுல் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி பின்வ அறிவிக்கப்படும். பரீட்சை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நடைபெறும்.

2. வேதனமும் சேவை நிபந்தனைகளும் :—

(அ) உள்ளூர் ஆட்சிச் சேவையில் உள்ள தரம் 4, மின்சார அத்தியட்சர்கள் பதவிகளுக்கு வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவார்கள். இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு :—வருடாந்தம் ரூ. 1,392—72—ரூ. 2,688. வருடாந்தம் ரூ. 1,968 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. அரசாங்க வரிகள், நிபந்தனைகளுக்கிணங்க, வீட்டுவாடகைப்படியும், தற்காலிக வாழ்க்கைப்படியும், தற்காலிக விசேட வாழ்க்கைப்படியும் கொடுபடத்தக்கவை. பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறத்தக்கவையும் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், உள்ளூர் ஆட்சிச்சேவை கைம்பெண்களினதும் அனுதைப் பிள்ளைகளினதும் உபகாரச்சம்பள நலன்களைப் பெற உரித்துடையவராவர்.

(ஆ) உள்ளூர் ஆட்சிச் சேவைப் பிரமாணங்களின் 22 (2) வது பிரமாணத்தின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவர். பதிற்கடமை காலப்பகுதி முடிவடைந்ததும், பதவியில் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவது கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பதிற்கடமை காலப்பகுதி முதலில் 6 மாதங்களுக்குச் செயற்படும். உள்ளூர் ஆட்சிக் கட்டளைச் சட்டத்தின் (264 வது அதிகாரம்) ஏற்பாடுகளுக்கும், அதன் கீழ் இயற்றப்பட்ட எந்தப் பிரமாணத்திற்கும் அவர்கள் உட்பட்டவராவர்.

(இ) காசு அல்லது அதிகாரசபையினால் அங்கீகரிக்கப் பட்ட உத்தரவாதச் சபையினுடைய நம்பிக்கை உத்தரவாத முறி ஒன்றை தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கொடுக்கவேண்டி ஏற்படும்.

(ஈ) தாம் எந்த உள்ளூராட்சி மன்றத்திற்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்களோ, அந்த உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள், தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வசிக்கவேண்டி ஏற்படும்.

3. தகுதி :—4.1.67 ல் அல்லது அதற்கு முன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளூராட்சிச் சேவையிலுள்ள தரம் 1, தரம் 2, மின்சார முகாரிகள், இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவர். அவர்கள் தாம் சேவிக்கும் உள்ளூ ராட்சி மன்றத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

4. (அ) **விண்ணப்பங்கள் :**—(1) பரீட்சைப் பிரவேசத்துக் கான விண்ணப்பங்களை கீழ்க்கண்டவாறு மாதிரிப் படிவத் தில் கண்டவாறு தயாரிக்கப்பட்டு கொழும்பு, த. பெ. 530, உ. ஆ. சே. அ. ச. தலைவருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

(ஆ) 4. 1. 67 ல் அல்லது அதற்கு முன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியில் கிடைக்கப்பெறாத எந்த விண்ணப்ப மும் நிராகரிக்கப்படும்.

(இ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவை யில் ஏற்கனவே ஊழியஞ் செய்விக்கப்படும் பரீட்சார்த்திகள், தாம் கடமைபார்க்கும் திணைக்களத் தலைவர்கள், உள்ளூ ராட்சி மன்ற ஆணையாளர்/விசேட ஆணையாளர்/தலைவர் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விதம் ஒரு பரீட்சார்த்தி செய்யத்தவறினால் அவர் தகைமையிழந்தவராவார்.

(ஈ) 4.1.67 க்கு முன், உ. ஆ. சே. அ. சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கும்படி நேரகாலத்துடன் தமது விண்ணப்பங் களை திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர் களிடம் சமர்ப்பிக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படு கிறார்கள்.

பி. கு—(1) விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) இவ்வறிவித்தலினால் வேண்டப்பட்ட தகை மைகளுக்கு எல்லாவிதத்திலும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சைப் பிரவேசம் :**—ஏற்றுக்கொள்ளப்பட்ட விண் ணப்பங்கள் அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு, உ. ஆ. சே. அ. ச. தலைவர், பிரவேசப்படிவங்களை வினியோகிப்பார். பரீட்சை யை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்த ரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப்படிவங்களைக் கொடுக்கவேண்டும். இத்தகைய படி வத்தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி தகைமையிழப் பவராவார்.

(2) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமரவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத் தில் தோற்றும் பரீட்சார்த்திக்கும் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(3) பிரவேச அட்டையுடன், நேரசூசியும் அனுப்பிவைக்கப் படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை தினத்தன்று, மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவ ரிடம் தனது பிரவேசப் படிவத்தைக் கையளிக்கவேண்டும்.

(4) பரீட்சை தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப்படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக் குப் பிரவேசப்படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபைத் தலைவருடன் தொடர்புகொள்ள வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :————.

(2) முழுப்பெயர் :————.

(3) முழுத் தபால் முகவரி :————.

பி. கு. :—பரீட்சைக்கு பிரவேசம் அளிக்கப்பட்டால், தகைமை ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று காது.

6. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதி யற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட் சைக்கு முன் அல்லது அதன் போது அல்லது அதன் பின் எந்த இடத்திலேயும், அவரது பரீட்சார்த்தம் இரத்து செய்யப்படத்தக்கது.

7. தம் அறிவின் எல்லைக்குள் பரீட்சார்த்திகளால் தரப்பட எந்தத் தகவல்களும் பொய்யானவை என்று காணப்படும் பட்சத்திலுங்கூட அவர்கள் நியமனம் பெற்றிருந்தால், பதவி நீக்கம் செய்யப்படத்தக்கவராவார். வேண்டுமென்றே எந்த உண்மையையும் மறைத்தால், இவ்விதமே தண்டிக்கப்படத் தக்கவராவர்.

8. **உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை :**—உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவரி னால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தி யோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தமது சபைகளில் கடமைபார்க்கும் உத்தியோகத்தர்களுக்குக் கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

9. **அடையாள அட்டைகள் :** தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும், மேற்பார்வையாளரின் திருப்திக் கிணங்க, பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்று அடை யாளத்தை பரீட்சார்த்திகள் நிரூபிக்கவேண்டும். இதற் கெனப் பின்வரும் தஸ்தாவேஜுகளில் ஏதாவதொன்று ஏற் றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சற்பகுதி மா அதிகாரியினால் வினியோகிக்கப் பட்ட அடையாள அட்டை.

(ஆ) இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக் குள் வினியோகிக்கப்பட்ட சட்டப்பெறுமதியான கடவுச்சீட்டு.

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தின்பேரில், இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக் குள் வினியோகிக்கப்பட்டதும், உடமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தரவுச்சீட்டு சான்றிதழ் அல்லது வேறு எந்த தஸ்தாவேஜு களாவது.

(ஈ) கடவுச் சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப் படம், அதன் பின் பக்கத்தில் கீழ்க் காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப்படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப்படிவத்தில் இருத்தல் வேண் டும்.

பின்புறத்திலுள்ள புகைப்படம் ———— என்பவருடைய தென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக் கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்து கிறேன்.

————.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை மண்டபததில தனது அடையாளச் சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமை யிழந்தவராவர்.

10. பரீட்சைத்திட்டம் :—பரீட்சை இரு பகுதிகளாக—அதாவது பகுதி 1—(எழுத்து), பகுதி 2—(நேர்முகம்)—நடாத்தப்படும். பரீட்சைப்பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா எழுத்துத் தாள்களிலும், கூடாத கையெழுத்துக்கும், எழுத்துக்கூட்டல் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துடைய பரீட்சார்த்திகள் தகைமை யிழப்பதற்கு உட்பட்டவராவர்.

பகுதி 1—எழுத்துப் பரீட்சை — புள்ளிகள்

கீழ் இழுவிசை விநியோக முறை நிர்மாணமும் பராமரிப்பும் ; டீசல் மின் உற்பத்தி நிலையங்களின் இயக்குவிப்பும், பராமரிப்பும் ; கட்டடங்களில் மின்சார அமைப்பு முறைகளும், சோதனைகளும் ; பம்ப் அமைப்புப் பராமரிப்பும் சோதனைகளும் ; விநியோகத் தொடர்ச்சிகளுக்கான மதிப்பீடு களைத் தயாரித்தல் ; 1950 ம் ஆண்டின் 19 ம் இலக்க மின்சார அதிகாரச் சட்டத்தின் பிரமாணங்களும், பாதுகாப்பு விதிகளும், ஆகிய விஷயங்களில் பரீட்சார்த்திகளின் அடிப்படைச் சித்தாந்த, செய்முறை அறிவைத் தீர்மானிப்பதற்கான 3 மணித்தியாலத்தாள். — 100

பகுதி 2—நேர்முகப் பரீட்சை

பி. கு. :—பரீட்சை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் நடாத்தப்படும். — 100

11. எழுத்துப் பரீட்சை முதலில் நடைபெறும். அதன் பெறுபேறுகளின் பேரில், நேர்முகப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதுவும் கொழும்பில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் விதிக்கப்படும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்கள், அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியில் பிரசுரமாகும். வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

தலைவர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

உ. ஆ. சே. அ. சபை அலுவலகம்,
த. பெ. 530, கொழும்பு 1,
5.12.1966.

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4 க்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—1967

(16. 12. 1966 இன் அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியிலுள்ள அறிவித்தலைப் பார்க்கவும்)

**பிரவேசத்துக்கான விண்ணப்பம்**

கவனிக்க : பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் இப்படிவம் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்பட்டு, தான் சேவைசெய்யும் உள்ளூராட்சி மன்றத்தலைவரூடாக 4.1.67 க்குப் பிந்தாமல், கொழும்பு 1, த. பெ. 530, உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்குக் கிடைக்கும்படியாக அனுப்பப்படவேண்டும்.

1. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :————
2. பரீட்சார்த்தி தற்பொழுது ஊழியஞ் செய்விக்கப்படும் உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் :————
3. உள்ளூர் ஆட்சி மின்சார முகாரிகளின் சேவையின் தரம் 1 க்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி :————
4. உள்ளூர் ஆட்சி மின்சார முகாரி சேவையின் தரம் 2 க்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி :————
5. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ————
6. உள்ளூர் ஆட்சிச் சேவையில் முதலில் நியமனம் பெற்ற திகதி முதல் வகித்த பதவிகளின் பதவிப் பெயர்கள் :————
7. பின்வரும் மொழிகளில், எந்தமொழி மூலம் பரீட்சையை எடுக்க விரும்புகிறீர்கள் என்று குறிப்பிடவும் :—
   சிங்களம் :————
   ஆங்கிலம் :————

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————

தலைவர், உ. ஆ. சே. அ. ச.

இவ் உள்ளூராட்சி மன்றத்தின் பணியாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றும் மேற்படி பரீட்சார்த்தி, உள்ளூர் ஆட்சி மின்சார முகாரிகள் சேவையின் தரம் 1/தரம் 2 ல்————. முதல் இருந்து வருகிறார் என்றும், அவரது சேவை காலம் பூராவும் திருப்திகரமாயுள்ளது என்றும் நான் சான்றுரைக்கின்றேன். தனது விண்ணப்பத்தில் அவர் குறிப்பிடும் தகவல்கள் சரியானவை.

கையொப்பம் :————.
ஆணையாளர்/தலைவர்.

உள்ளூராட்சி மன்றம்:————

திகதி :————

12-787—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

# துணை விதிகள்

## தொடந்துவைப் பட்டின சபை

### பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தொடந்துவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 30.11.1966.

துணைவிதி

1. தொடந்துவைப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்ட நியமத்துணைவிதிகளின் 15 ம் பாகத்தின் 1 ம் துணை விதியின் நோக்கங்களுக்காக "சந்தைப் பிர தேசம்" என்பது தொடந்துவைப் பொதுச் சந்தையிலிருந்து 550 யார் ஆரையுள்ள ஒருவட்ட வடிவமான பிரதேசமாகும்.

2. பொதுச் சந்தையிலன்றி சந்தைப் பிரதேசத்தினுள் இறைச்சி, கோழி வகை, மீன், பழம், மாக்கறி ஆகியவற்றின் விற்பனவு தடைசெய்யப்பட்டுள் ளது.

3. சந்தைப் பிரதேசத்துக்கு வெளியே இருக்கும் ஆனல் தொடந்துவைப் பட்டின சபை எல்லைக்குள்ளடங் கிய மாக்கறிக் கடை ஒவ்வொன்றுக்கும் வருடாந் தம் ரூபா 10 உத்தரவுப் பத்திரக் கட்டணமாக அற விடப்படும்.

4. தொடந்துவைப் பட்டின சபையால் ஆக்கப்படும் 1959 திசம்பர் 11 ன் 12,002 ம் இலக்க கசெற்றிற் பிர சுரிக்கப்பட்ட சந்தைப் பிரதேசம் சம்பந்தமான துணைவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

12-836—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

## உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்ச கர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாய மான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளை சட்டத்தின் 36 ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு, டிசம்பர், 3, 1966.

அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| மாத்தளை மாவட்டம் | |
| கம்பஹஸியபத்து கிராமச் சபை | |
| 3 | அளுத்கெதர சரீப்தீன், எம். |
| இரத்தினபுரி மாவட்டம் | |
| குகுல்கோரளை பள்ளேபத்து கிராமச் சபை | |
| 7 | நம்முனிகே ஹேம்பால. |

12-871—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட் சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ஆம் அத்தியாய மான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத் தின் 66(2) ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு, டிசெம்பர், 3, 1966.

அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| திருக்கோணமலை மாவட்டம் | |
| அக்போபுர கிராமச் சபை | |
| 5 | லியனகே தணபால கீர்த்திசேன பெரேரா |
| பதுளை மாவட்டம் | |
| சொரணதொற்ற கிராமச் சபை | |
| 1 | ரத்நாயக்க முதியன்செலாகே பிற்றஹா வத்தே கங்னதி |

12-872—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

## நானாவித அறிவித்தல்கள்

### வெலிகாமம் நகர சபை
#### உள்ளூரதிகார சபைகள் (பொதுத் துணைவிதிகள்) சட்டம்

(261 ம் அத்தியாயமாம்) உள்ளூராட்சிச் சபைகள் (பொதுத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவுக்கமைவாக வெலிகாமம் நகர சபையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அப்பிரிவிற்கிணங்க இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் இயற்றப்பட்டதும், சனப் பிரதிநிதிகள் சபையாலும், மூதவையாலும் நிறைவேற்றப் பட்டு 1954, மார்ச்சு 26 ன் 10,657 ம் இலக்கக் கசற்றில் அறி விக்கப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமான பொதுத் துணைவிதிகளின் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 ஆகிய பாகங்களை இத்தீர்மானம் கசற்றில் பிரசுர மாகும் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்வதென்று, வெலி காமம் நகர சபை, (261 ம் அத்தியாயமாம்) உள்ளூராட்சிச் சபைகள் (பொதுத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) உட்பிரிவுக்கமைய இத்தால் தீர்மானிக்கின்றது.

எம். பி. வீலாரெத்ன,
தலைவர்.

நகர சபைக் காரியாலயம்,
வெலிகாமம், 1966, பெப்ருவரி 5.

12-849—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

## சங்கானைப் பட்டின சபை
### சோலைவரி—1967
### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்
### (அத்தியாயம் 256)

இத்தாற் சகலரும் அறிய சங்கானைப் பட்டின சபை, பட்டின சபைச் சட்டத்தின்படி (அத்தியாயம் 256) 1967 ம் வருடத்திற்கு, சென்ற வருடத்திற்கு விதித்ததின் பிரகாரம் பின்வரும் சோலை வரியை இப்பட்டின சபைப் பரிபாலன எல்லைக்குள் விதிக்கின்றது.

நூற்றிஐம்பத்தொன்பதாம் (159 ம்) பிரிவின் கீழ் பட்டின சபை எல்லைக்குளுள்ள ரூபா. 50 க்கு மேல் வருடாந்தப் பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்திற்கும் 7 வீத வரி, நான்கு சம தவணைகளில் முறையே மார்ச் 31, யூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் செலுத்தப்பட வேண்டும்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்.

பட்டின சபை அலுவலகம்,
சங்கானை, 2.12.66.

12-843/1—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

## சங்கானைப் பட்டின சபை
### நாய் வரி—1967
### நாய்ப் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 334)

இத்தாற் சகலரும் அறிய சங்கானைப் பட்டினசபை, நாய்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (334 ம் அத்தியாயம்) 4ம் பிரிவின் கீழ் 1967 ம் வருடத்திற்கு சங்கானைப் பட்டினசபைப் பரிபாலன எல்லைக்குள் பின்வரும் வரித்தொகை பதிவுக்கட்டணமாக விதிக்கின்றது.

அ. ஒவ்வொரு ஆண் நாய்க்கும் ரூபா. 1/-
ஆ. ஒவ்வொரு பெண் நாய்க்கும் ரூபா. 1/-

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 2.12.66.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்.

12-843/2—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

---

## சங்கானைப் பட்டினசபை
### ஊர்திகளினதும் மிருகங்களினதும் வரி—1967
### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 256)

இத்தாற் சகலரும் அறிய சங்கானைப் பட்டின சபை —

1. பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 161 ம் பிரிவின் கீழ் 1967 ம் வருடத்திற்கு கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் சொல்லப்பட்ட வரியை வாகனங்கள், மிருகங்கள் மீது விதிக்கின்றது.
2. 163 (3) பிரிவின் கீழ் 1967 ம் வருடம் மார்ச் 31 ம் திகதிக்கு முன்பாக சொல்லப்பட்ட வரியை செலுத்தப்பட வேண்டுமென அக்கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மேலும் விதிக்கின்றது.

### அட்டவணை

| | ரூபா. சதம் |
|---|---|
| வாகனம் எதற்கும் மோட்டார்க் கார், மோட்டார்க் முச்சில்லுக்கார், மோட்டார் லொறி, மோட்டார் பைசிக்கள், வண்டி, கைவண்டி, றிக்ஷோ, பைசிக்கிள் அல்லது முச்சில்லுப் பைசிக்கிள் அல்லது வாகனம் ஒவ்வொன்றுக்கும் ... ... ... | 5. 00 |
| பைசிக்கிள் அல்லது முச்சில்லுப் பைசிக்கிள் அல்லது பைசிக்கிள் கார் அல்லது வண்டி, அல்லது முச்சில்லுப் பைசிக்கிள் அல்லது கார் :— | |
| (1) வியாபார நோக்கத்துக்கு உபயோகிக்கப்படின் ... | 5. 00 |
| (2) வியாபாரமல்லாத வேறு நோக்கத்துக்கு உபயோகிக்கப்படின்...... ... | 1. 00 |
| சகலவகை இரட்டை மாட்டுப் பார வண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் ... .... | 4. 00 |
| சகலவகைக் கைவண்டி ஒவ்வொன்றுக்கும் ... ... | 4. 00 |
| சகலவகை ஒற்றைமாட்டுப் பார வண்டிகள் அல்லது கைவண்டிகள் ஒவ்வொன்றுக்கும் ... | 2. 00 |
| சகலவகை, குதிரைகள் அல்லது கோவேறு கழுதைகள் ... ... ... | 5. 00 |
| சகலவகை ஆளிழு வண்டிகள் ... ... | 2. 50 |
| சகலவகை வண்டிகள் அல்லது கழுதைகள் ... | C. 50 |

12-843/3—16.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,726

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1966

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் .. | 2.12.66 | வெள்ளி .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

### அட்டவணை—1967

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. | 6.1.67 | வெள்ளி .. | 29.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 12.1.67 | வியாழன் .. | 5. 1.67 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.1.67 | வெள்ளி .. | 11.1.67 | புதன் | பி. ப. | 3.30 |
| | 27.1.67 | வெள்ளி .. | 20.1.67 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆண்டு டிசெம்பர் மீ 9 ம் உ.

**பேர்னுட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.